இல்லை, மேல்நிலைப் பள்ளியும் இல்லை. எனவே, L.N. புரம் ஊராட்சியில் இருக்கக்கூடிய நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்றித் தரவும், அதேநேரத்தில் மதுராந்தகம் நகரத்தில் இதுவரை மேல்நிலைப் பள்ளி, உயர்நிலைப் பள்ளி ஆகியவை அரசுத் தரப்பிலே இல்லை என்பதால் அவற்றை உருவாக்கித் தரவும் வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை தங்கள் வாயிலாகக் கேட்டு விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு கேள்விகளை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கிறார்கள். லஷ்மி நாராயணபுரம் என்கிற இடத்திலிருக்கிற நடுநிலைப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக மாற்ற வேண்டுமென்பது ஒரு கோரிக்கை. லஷ்மி நாராயணபுரம்-லஷ்மி, நாராயணன் இரண்டுமே செல்வத்தைத் தருவதால், நீங்கள் சரஸ்வதியை அழைக்கிறீர்கள். இந்த ஆண்டு முடியுமா என்பதைப் பார்த்து நாங்கள் அதைப் பரிசீலிக்கிறோம்.

அதே நேரத்தில் மதுராந்தகத்தைப் பொறுத்தவரையில், வளர்ந்து வருகின்ற ஒரு நகரம். அங்கு நடுநிலைப் பள்ளி மட்டும்தான் இருக்கிறது என்று சொல்லியிருக்கிறீர்கள். அதற்கான நிதியும், இடமும் இருக்குமேயானால், இந்த ஆண்டே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் அதைப் பரிசீலனைக்கு எடுத்துச்சென்று, உயர்நிலைப் பள்ளியாக மாற்றுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 102, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

102—

துணை மின் நிலையம்

***39435—திரு. பி.எம். நரசிம்மன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

2019 ஜூலை 15]

(அ) திருத்தணி தொகுதி, கீச்சலம் கிராமத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினரின் தொகுதியான திருத்தணி தொகுதி, கீச்சலம் கிராமத்தில் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு கல்லாங்குத்து என்ற இடத்தில் புறம்போக்கு நிலம் 0.36.0 ஹெக்டேர் அளவு கண்டறியப்பட்டிருக்கிறது. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், புதிய துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.*

முற்பகல் 10–10

திரு. பி.எம். நரசிம்மன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் முதன்முதலில் இலவச மின்சாரத்தைத் தந்தவர் சரித்திர நாயகன் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தொழில் வளர்ச்சிக்குத் தேவை உள் கட்டமைப்பு வசதிகள், தடையில்லா மின்சாரம் என்பதைக் கருத்தில்கொண்டு தமிழ்நாட்டை மின்மிகை மாநிலமாக உயர்த்திக் காட்டியவர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இருபெரும் தலைவர்களின் வழிகாட்டுதலோடு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் மின் திட்டங்களைத் தொடங்குவதில் அதிகக் கவனம் செலுத்தி வருகிறார்கள். நான் சார்ந்திருக்கிற திருத்தணி தொகுதியில் கீச்சலம் கிராமத்தில் 5–6–2018 அன்று துணை மின் நிலையம் அமைக்க வருவாய்த் துறை, மின் துறைக்கு நில உரிமை மாற்றம் செய்து உத்தரவிட்டது. இப்பகுதி பல கிராமங்களை உள்ளடக்கியதாகும். இப்பகுதி மக்கள் வேளாண்மைத் தொழிலை நம்பியே வாழ்கிறார்கள். எனவே, மறுபரிசீலனை செய்து, கீச்சலம் கிராமத்தில் மாண்புமிகு அம்மாவின் அரசு இந்த ஆண்டே*

துணை மின் நிலையத்தை அமைத்துத் தருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் ஏற்கெனவே தெரிவித்தேன். கீச்சலம் கிராமத்தில், கல்லாங்குத்து என்ற இடத்தில் புறம்போக்கு நிலம் கண்டறியப்பட்டிருக்கிறது. அதற்கான கோப்புகள் வருவாய்த் துறையின் ஆய்வில் இருக்கின்றன. அது கிடைத்தவுடன், இந்த ஆண்டே துணை மின் நிலையம் அமைக்கப்படும் என்றுதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்திருந்தேன். அந்த இடம் வருவாய்த் துறையால் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். ஆனால், அந்த இடம் இன்னும் ஒப்படைக்கப்படவில்லை. வருவாய்த் துறையினர் ஒப்படைப்பதாகச் சொல்லியிருக்கின்றார்கள். அந்தக் கோப்புகளெல்லாம் மின்சாரத் துறையில் கிடைக்கப்பெற்று, வகைமாற்றம் செய்யப்பட்ட பின்னர், மின்சார வாரியத்திடம் அந்த இடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர், அந்தப் பணிகள் தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எம். நரசிம்மன் அவர்கள்.

திரு. பி.எம். நரசிம்மன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அந்த இடம் மின்சாரத் துறைக்கு ஒப்படைக்கப்பட்டதற்குப் பிறகு துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் தொடங்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதற்காக தொகுதி மக்களின் சார்பில் என்னுடைய நெஞ்சார்ந்த வணக்கத்தையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். 2011 ஆம் ஆண்டு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை சுமார் 464 துணை மின் நிலையங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இது இந்த அரசின் பெரும் சாதனையாகும். திருத்தணி நகராட்சியாக இருப்பதாலும், கோயில் நகரமாக இருப்பதாலும் மின் தேவை

அதிகரித்துள்ளது. திருத்தணி நகரில் துணை மின் நிலையம் அமைக்க நிலம் அடையாளம் காணப்பட்டுள்ளது. திருத்தணி வட்டத் தலைமையிடமாக இருப்பதாலும், பள்ளிகள், கல்லூரிகள், நீதிமன்றங்கள், வணிகக் கட்டடங்கள் மற்றும் ஆயிரக்கணக்கில் வீடுகளும் இருப்பதால், திருத்தணியில் அம்மா அவர்களின் அரசு ஒரு புதிய துணை மின் நிலையத்தை அமைத்துத் தருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதில் ஒரு சிறிய திருத்தம். மாண்புமிகு அம்மா அவர்கள் 2011 ஆம் ஆண்டு பொறுப்பேற்றதிலிருந்து இதுவரை 507 துணை மின் நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, உறுப்பினர் அவர்கள் சொன்னதை 507 என்று திருத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டபடி உடனடித் தேவை இருக்கின்ற காரணத்தினாலும், நிலம் கையகப்படுத்துவதில் காலதாமதம் ஏற்படுகின்ற காரணத்தினாலும், 13 கி.மீ. தொலைவில் இருக்கக்கூடிய கே.ஜி. கண்டிகை துணை மின் நிலையத்திலிருந்துதான் அவர்களுக்கு தற்போது மின்சாரம் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கிறது. மின் பளு அதிகமாக இருக்கின்ற காரணத்தினால், தற்போது அதிகாரிகளுடன் ஆய்வு செய்து, தனி feeder ஒன்றினை அமைக்க ஏற்பாடுகளை செய்யச் சொல்லியிருக்கின்றோம். இன்னும் இரண்டு, மூன்று மாத காலத்திற்குள் அப்பணி முடிந்துவிட்டால், புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கு முன்பாகவே அங்கு மின் பளுவைக் குறைப்பதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டும் என்று அதிகாரிகளுக்குச் சொல்லியிருக்கிறோம். அந்தப் பணிகளை விரைந்து முடிப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்திருக்கின்றோம். நிச்சயமாக புதிய துணை மின் நிலையமும் உடனடியாக அமைக்கப்படும் என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. S. காத்தவராயன் அவர்கள்.

திரு. S. காத்தவராயன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். எங்களுடைய ஒப்பற்ற தலைவர் தளபதியார் அவர்களை வணங்குகிறேன். என்னுடைய குடியாத்தம் தொகுதி, குடியாத்தம் நகரத்தில் உள்ள மின் துறை அலுவலகம் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. கிட்டத்தட்ட ரூ.1 இலட்சம் மாத வாடகையாகச் செலுத்தப்பட்டு வருகிறது. அங்கு* D.E., E.E., A.E., *ஆகியோரின் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. அருகில் 4,500 சதுர அடி இடம் மேலாளத்தூர் சாலையில் காலியாக இருக்கிறது. எனவே, அந்த இடத்தில் மின்சாரத் துறைக்கென சொந்தக் கட்டடம் கட்டித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன். அரசினால் செலுத்தப்படும் வாடகைத் தொகையைக் குறைத்து, அந்தத் தொகையில் மின்சாரத் துறைக்கென சொந்தக் கட்டடத்தை உருவாக்கினால் ஏதுவாக இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன இடம் எந்த இடத்தில் இருக்கிறது என்பது தெரியவில்லை. அது வருவாய்த் துறைக்குச் சொந்தமான இடமாக இருந்தால் உடனடியாகக் கையகப்படுத்தப்படும். எங்கெங்கெல்லாம் இடம் கிடைக்கின்றதோ, அங்கெங்கெல்லாம் வாடகைக் கட்டடங்களில் இயங்கிக் கொண்டிருக்கின்ற அலுவலகங்களை மாற்றி, மின்சார வாரியத்திற்கென சொந்தக் கட்டடங்கள் கட்ட வேண்டும் என்றுதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்றீர்கள். அந்த இடத்தை கள ஆய்வு செய்து, அந்த இடம் உடனடியாகக் கிடைத்ததென்று சொன்னால், இந்த ஆண்டே பணிகளைத் தொடங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 103, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*